4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP. 55 / 2022** நாள்: **12.02.2025** ம.சா.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மல்லிகா | தொழில் | : | கூலி வேலை |
| க/பெ | : | மகுடிஸ்வரன் | கிராமம் | : | கணபதிபாளையம் |
| வயது | : | 35 | தாலுகா | : | உடுமலைப்பேட்டை |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை -

**நான் MCOP. 120 / 2022 மனுவில் மனுதாரர். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.**

ம.சா.ஆ.21 -என் மகன் ருத்தரமூர்த்தியின் சடலக்கூராய்வு அறிக்கை - உண்மை நகல்

ம.சா.ஆ.22 - என் மகன் ருத்தரமூர்த்தியின் இறப்புச் சான்றிதழ் - நகல்

ம.சா.ஆ.23 - என் மகன் ருத்தரமூர்த்தியின் வாரிசு சான்றிதழ் - நகல்

ம.சா.ஆ.24 - எனது ஆதார் நகல்

ம.சா.ஆ.25 - எனது வங்கிக் கணக்கு நகல்

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -

—

விபத்தில் இறந்த ருத்தரமூர்த்தி என் மகன் ஆகும். விபத்தின் போது பாலாஜி என்பவர் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்தில் என் மகனும் மற்றொரு நபரும் என மூன்று நபர்கள் பயணம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். விபத்தின் போது தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. **3** நபர்களும் தலை காயத்தால் தான் இறந்துள்ளார்கள் என்றால் சரிதான். தலைகவசம் அணிந்து இருந்தால் தலையில் காயம் ஏற்பட்டு இறப்பு ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனம் ஓட்டிச்சொன்ற பாலாஜிக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் உள்ளது. இரு சக்கர வாகனத்தில் **3** நபர்கள் தலைகவசம் அணியாமல் செல்வது சாலை விதிகளுக்கு எதிரானது என்பதால் எங்களுக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. யாருடைய அஜாக்கரதையால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. வேன் ஓட்டுனர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்து பொள்ளாச்சி - உடுமலைப்பேட்டை சாலையில் உள்ள கணபதிபாளையம் பிரிவில் நடந்தது என்றால் சரிதான். என் மகன் மற்றும் இரு சக்கர வாகனத்தில் சென்றவர்கள் உடுமலைப்பேட்டையில் இருந்த கணபதிபாளையம் நோக்கி சென்றுகொண்டிருந்தார்கள். உடுமலைப்பேட்டை- பொள்ளாச்சி சாலையில் கணபதிபாளையம் செல்லுவதற்கு வலது புறம் கிளை சாலையில் செல்ல வேண்டும் என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற பாலாஜி கணபதிபாளையம் திரும்புவதற்காக எந்த சைகையும் செய்யாமல் பிரிவு சாலைக்கு முன்பே கவனக்குறைவால் திரும்பியதால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. **1**ம் எதிர்மனுதாரர் சாலைவிதிகளை பின்பற்றி சரியான முறையில் தான் வாகனத்தை செலுத்தினார் என்றும் பாலாஜி தான் திடீர் என வடக்காக திரும்பியதால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல.காவல்துறையினர்

வழக்கை விசாரணை செய்து இரு சக்கர வாகனம் ஓட்டிய இறந்துபோன பாலாஜி மீது தான் தவறு என்று வழக்கை பொருண்மை தவறு என்று குறிப்பிட்டு புகார்தாரக்கு அறிவிப்பு கொடுத்து **RCS No.48/2020** என வழக்கு முடிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எங்களுக்கு அறிவிப்பு கொடுத்துதான் வழக்கு முடிக்கப்பட்டுள்ளது என்றும் நான் வழக்கிற்காக அதனை மறுக்கிறேன் என்றால் சரியல்ல.இரு சக்கர வாகன ஓட்டுனரின் கவன குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்பதாலும் **1** ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் அஜாக்கரைதையாலும் விபத்து ஏற்பட வில்லை என்பதால் **3** ம் எதிர்மனுதாரர் எனக்கு எந்த இழப்பிடும் வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. விபத்தின் போது என் மகன் **9** ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். அவனுக்கு அப்போது **15** வயது ஆகும். என் மகனுடைய பள்ளி சான்றிதழ்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. **1** ம் எதிர்மனுதாராரின் கவனகுறைவால் விபத்து நடைபெறவில்லை என்பதால் **3** ம் எதிர்மனுதாரர் இழப்பிடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் மனு தள்ளுபடி செய்யத்ததக்கது என்றால் சரியல்ல. என் மகன் பயணம்செய்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தில் தான் நாங்கள் பரிகாரம் பெறவேண்டும் என்றால் சரியல்ல.

<u>5 ம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை</u>

**மனுவிற்கான விபரம் நான் கூறியது தான். விபத்து சம்மந்தமாக வேன் ஓட்டுனர் மீதுதான் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.** 4,5 **எதிர்மனுதாரர்களை சட்ட சிக்கலை தவிர்ப்பதற்காக தான் வழக்கில் சேர்த்துள்ளோம் என்றும் அவர்கள் மீது பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனம் பாலகுமார் என்பவருடையது தான் என்றால் சரிதான். .அந்த வாகனம் பாலாஜியால் இரவல் வாங்கி ஓட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்..** 5 ம்**எதிர்மனுதாரர் நிறுவனத்தில் இரு சக்கர வாகனத்தில்**

செல்பவர்களுக்கு முனைம தொகை செலுத்தப்படவில்லை என்பதால் 5ம் எதிர்மனுதாரை பொறுத்து மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-C.Rajalingom, B.A.,B.L.,
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.